**செய்தி வெளியீடு எண் : 006** **நாள்: 02.01.2022**

## செய்தி வெளியீடு

**திருவெற்றியூர் தொகுதிக்குட்பட்ட அரிவாக்குளம் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்த சம்பவத்தில் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு - மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் புதிய குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்.**

திருவெற்றியூர் மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் இன்று (2.1.2022) திருவெற்றியூர் தொகுதிக்குட்பட்ட அரிவாக்குளம் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்த சம்பவத்தில் வீடுகளை இழந்த 28 குடும்பங்களில் 17 குடும்பங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பின்னர் தெரிவிக்கையில், திருவெற்றியூர் தொகுதிக்குட்பட்ட அரிவாக்குளம் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட 28 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு 27.12.2021 அன்று இடிந்து விழுந்துவிட்டது. இத்தகவலை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கில் 28 குடும்பங்களுக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1 லட்சம் வீதம் ரூ.28லட்சம் வழங்க ஆணையிட்டு, அன்றைய தினமே வழங்கப்பட்டது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்த வீடுகளை இழந்த 28 குடும்பங்களுக்கு மாற்று வீடுகள் வாரியத்தின் சார்பில் வழங்கப்படும் என்று உத்தரவிட்டர்கள்.

அதன் அடிப்டையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் கோரிக்கைகளை ஏற்று இன்றைய தினம் 28 குடும்பங்களில் 17 குடும்பங்கள் மாற்று வீடுகள் பெற ஒப்புக்கொண்டு மாற்று வீடுகளை பெற்றுக் கொண்டனர். இந்த 17 குடும்பங்களில் 9 குடும்பங்களுக்கு ஆல் இந்தியா ரேடியோ எர்ணாவூர் திட்ட பகுதியிலும், 8 குடும்பங்களுக்கு என்.டி.ஒ குப்பம் திட்ட பகுதியிலும் மாற்று வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11 குடும்பங்கள் அந்த இடங்களில் உள்ள பழைய குடியிருப்புகளை அப்புறபடுத்திவிட்டு புதிதாக கட்டப்படவுள்ள குடியிருப்புகளில் எங்களுக்கு வீடுகள் வழங்க வேண்டும் என்று எழுதி கொடுத்துள்ளனர். மறு கட்டுமானம் வரை வெளியே வாடகைக்கு இருக்கும் காலத்திற்கு அரசு தருகின்ற கருணைத் தொகை ரூ. 24,000 நிதி அவர்களுக்கு வழங்கப்படும். அக்குடும்பங்களின் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு புதிய குடியிருப்பு கட்டடப் பணி முடிந்தவுடன் அவர்களுக்கு அதே பகுதியில் வீடுகள் ஒதுக்கப்படும். மேலும், தரக்கட்டுபாட்டு குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், அத்திட்ட பகுதியில் மீதமுள்ள 308 வீடுகளில் வாழும் குடும்பங்கள் படிப்படியாக காலி

செய்து கொடுத்தால் அப்பகுதியிலேயே நல்ல தரத்துடன் வீடுகள் கட்டப்பட்டு அங்கு குடியிருந்தவர்களுக்கே மீண்டும் வீடுகள் வழங்கப்படும் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சுதர்சனம், திரு.கே.பி.சங்கர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப., வாரிய தலைமை பொறியாளர் திரு. இராம. சேதுபதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**